No. of Printed Pages : 8 + Cash Withdrawal Form

**3460**

J-13

பதிவு எண் | | | | | | | |

8029820

# தமிழ் இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38 க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

## பிரிவு - I
(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் :

(அ) திண்ணை (ஆ) வளையல்

(இ) மையம் (ஈ) ஐந்து

2. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ________ ஐ குறிக்கும்.

(அ) பசு (ஆ) காளை

(இ) கன்று (ஈ) எருது

[ திருப்புக

3. பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக.
(அ) கண் (ஆ) படம் பார்த்தான்
(இ) கடல் (ஈ) தாமரை

4. ஒரு பொருட்பன்மொழிக்குச் சான்று :
(அ) உயர்ந்தோங்கிய மரம் (ஆ) செய்வேன்
(இ) கை வலிக்கும் (ஈ) புன்கண்

5. குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகள் :
(அ) புறா, பருந்து (ஆ) கிளி, மயில்
(இ) நாரை, அன்னம் (ஈ) கடற்காகம், கிளி

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. வெண்பாவின் ஓசை __________.

7. கிளி போல பேசினாள் - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு __________.

8. அணி என்னும் சொல்லுக்கு __________ என்பது பொருள்.

9. நிரை கவர்தல் என்பது __________ திணை.

10. செம்மொழி - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி __________.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க :** **10x1=10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. உருவகத்தை உவமையாக மாற்றுக - பாதமலர்

13. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. முக்கனி

14. திருக்குறளை அனைவரும் அறிவர் - எவ்வகை வாக்கியம் ?

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மை பிழைகளை நீக்கி எழுதுக.
ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதிபெற்று தந்தார்.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.

18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள, பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.

19. உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
பசுமரத்தாணி போல

20. இளமைப் பெயர்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| கீரி | - | குஞ்சு |
| கோழி | - | கன்று |
| | | பிள்ளை |

## பிரிவு - II
(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5x2=10**

21. பகுபத உறுப்பிலக்கணம் தருக - அறிந்து

22. ஐகாரக் குறுக்கம் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. வினைச் சொல் என்றால் என்ன ?

24. கொளல் வினாவைச் சான்றுடன் விளக்குக.

25. அடுக்குத் தொடர் என்றால் என்ன ? சான்று தருக.

26. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

27. பாடாண் திணை - விளக்குக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 - ல் வினா எண் 35 - ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க :** 2x5=10

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணத்தையும் எழுதுக.

பாரி பாரி என்று பலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே.

29. இரட்டுற மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

அல்லது

சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. சட்ட வகைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

32. குறட்டை ஒலி கதையில் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

33. தமிழகத்தில் உள்ள மிகப்பழமையான நூலகங்கள் பற்றி தொகுத்து எழுதுக.

பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

"டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே: ஆனால், நீங்க இன்னும் எனக்கு டிரஸ் எடுக்கவில்லையே வொய் டாடி ? என்னோட பிரண்ட்ஸை எல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லி கால் பண்ணியிருக்கிறேன்."

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக.

35, 79, 41, 120

35. **கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க :** 3+2=5

(அ) Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables, and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:

1. Old is gold.
2. No pain no gain.
3. Art is long but life is short.
4. Look before you leap.

35. **குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்குக்கான மாற்று வினா.** 5x1=5

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார் ? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத் திறனாளிகளிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம்.

வின்சென்ட் வான்கோக் என்பவர் காது கேட்புத் திறனற்ற மாற்றுத் திறனாளி. அவர் ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கினார். ஆனால் அவரை உதவியாளராகச் சேர்த்துக் கொள்ள மற்ற ஓவியர்கள் மறுத்து விட்டனர். அதற்காக அவர் மனம் வருந்தவில்லை. தாமே தூரிகை எடுத்து வரையத் தொடங்கினார். வாழ்வில் ஏற்றம் பெற்று மிகச் சிறந்த ஓவியர் என்ற பெயரும் பெற்றுவிட்டார்.

ஓவியர் பிக்காசோவின் ஓவியம் பெரும்புகழ் பெற்றதுபோல் இவருடைய ஓவியங்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

[ திருப்புக

நம்பிக்கைதான் வாழ்வின் உயிர்நாடி, நம்பிக்கை இருந்தால் நம் விதியைக்கூட மாற்றிச் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவர்கள் வாழ்க்கை மிகச் சிறந்த சான்று.

1. சாதனை செய்பவர்கள் யார் ?
2. நம்பிக்கை யாரிடம் அதிகமாக உள்ளது ?
3. வின்செண்ட் வான்கோக் எதில் சிறந்து விளங்கினார் ?
4. வின்செண்ட் வான்கோக்கின் ஓவியம் யாருடைய ஓவியத்துடன் ஒப்பு நோக்கப்படுகிறது ?
5. வாழ்வின் உயிர்நாடி எது ?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

ஓர் ஊரில் மக்கள் சோம்பலாக இருப்பதைப் பார்த்த மன்னன் அவர்களை மாற்ற நினைத்தான். மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தான். அதற்கு அடியில் புதையலை ஒளித்து வைத்தான். புதையலைக் கண்டுபிடிப்பவருக்கு அது சொந்தம் என அறிவித்தான். ஒரு நாள்........

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

பள்ளி அல்லது நட்பு

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக : 1x5=5

அப்பாநான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின் தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

-இராமலிங்க அடிகள்

## பகுதி - 6

38. கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1x5=5

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க : 3+2=5

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடிப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா ?
2. நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும் ?
3. நீ உன் பெற்றோரிடம் எவ்வாறு நடந்து கொள்வாய் ?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க :

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாக படித்துக் கொண்டிருந்தாள். பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டிற்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள் ?
2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

[ திருப்புக

பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க : 1x10=10

(அ) பத்தாம் வகுப்புப் பொது தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

அல்லது

(ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் தயாரித்தெழுதுக.

பகுதி - 2

41. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக : 1x10=10

(அ) சுற்றுச்சூழல் - மாசுக் கட்டுப்பாடு, இயற்கையை அழித்தல் - காற்று மாசு - நச்சுப்புகை - நீர் மாசு - தொழிற்சாலையின் கழிவு - மாசடைந்த நீர் - ஒலி மாசு - ஒலி பெருக்கி இரைச்சல் - கட்டுப்படுத்தும் வழிகள்.

அல்லது

(ஆ) பாரதியார் - பிறப்பும் இளமையும் - விடுதலை வேட்கை - தேசியக் கவிஞர் பாரதியார் - முன்னறி புலவர் பாரதியார் - சமுதாயத் தொண்டு - மொழிப்பற்று - புதுமைக் கவிஞன்.

-o0o-

8029820

38. வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்

வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம் நிரப்புதல்

நாள் ............

பேரேடு

பதிந்தவர்

சேமிப்பு வங்கிக் கணக்கு எண் ..........

இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்படவேண்டும்.

சேமிப்புக் கணக்கு ____________20

............................ வங்கி............... எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு

ரூபாய் ........................................................................... வழங்குக.

| ரூ. |
|---|

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்புவரை பணம் கொடுக்கப்படும்

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்